**சுருக்கம்**

நெடுஞ்சாலை–தலைமைப் பொறியாளர், தர உறுதி மற்றும் ஆராய்ச்சி என அழைக்கப்பட்டு வரும் அலகினை இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் எனப் பெயர் மாற்றம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்ஆர்1) துறை

அரசாணை (நிலை) எண். 152 நாள். 04.10.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044,
விஜய வருடம் புரட்டாசி மாதம் 18 ஆம் நாள்.

படிக்கப்பட்டது

1. அரசு ஆணை (வா) எண். 185, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.3) துறை, நாள். 24.05.2010.
2. முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் கடித எண். 10856/நிர் 2(1)/2010, நாள். 02.02.2011.
3. தலைமைப் பொறியாளர் (நெ), தரஉறுதி மற்றும் ஆராய்ச்சி அவர்களின் கடித எண். 2845/HRS/PA(T)/2008, நாள். 24.08.2012 மற்றும் 24.07.2013.

-----

**ஆணை:**

நெடுஞ்சாலைத் துறையை சீரமைத்து வலுப்படுத்துதல் தொடர்பாக உலக வங்கியால் நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் அளித்த ஆய்வறிக்கையை அடிப்படையாக கொண்டு, அனைத்து நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அரசு செயலாளர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை) ஆகியோர் நடத்திய பல்வேறு கூட்டங்களில் முன்மொழியப்பட்ட பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் நெடுஞ்சாலைத் துறையில் ஏற்கனவே இருந்த 8 அலகுகளுடன், "முதன்மை இயக்குநர் அலகு" என்று புதிய அலகு தோற்றுவிக்கப்பட்டு மேற்படி அனைத்து 8 அலகுகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க, ஒரு முதன்மை இயக்குநர் பணியிடம் மேலே 1–இல் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

2. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 14.11.1957–இல் துவக்கி வைக்கப்பட்டு, இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் என்ற பெயரானது கண்காணிப்புப் பொறியாளர் பதவியிலிருந்து தலைமைப் பொறியளார் பதவியாக அரசாணை (நிலை) எண். 1490 (Tpt) நாள். 14.12.1981–இல்

உயர்வளிக்கப்பட்டது. இந்திய சாலை காங்கிரஸ், இந்திய சாலைப் போக்குவரத்து மற்றும் மேம்பாட்டு சங்கம், நெடுஞ்சாலை ஆராய்ச்சி வாரிய குழு போன்ற பல அமைப்புகளில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் உறுப்பினராக உள்ளார். மத்திய சாலை ஆராய்ச்சி நிலையம், தேசிய நெடுஞ்சாலை பொறியாளர் பயிற்சி நிலையம், தேசிய ஊரக சாலை வளர்ச்சி முகமை உள்ளிட்ட பல்வேறு நெடுஞ்சாலை தொடர்புடைய ஆய்வு நிலையங்களுக்கு தலைமை நிர்வாகி, இயக்குநர் என்ற பெயரில் அழைக்கப்படுவதாகவும் இந்திய சாலை காங்கிரஸ்–இன் தொழில் நுட்ப குழுவில் இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் என்ற பெயரே தற்போதும் பயன்படுத்தப்படுவதாலும் தலைமைப் பொறியாளர் (தர உறுதி மற்றும் ஆராய்ச்சி) என அழைக்கப்பட்டு வரும் அலகினை பழையபடி இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் என பெயர் மாற்றம் செய்யுமாறு தலைமைப் பொறியாளர் (தர உறுதி மற்றும் ஆராய்ச்சி) அவர்கள் மேலே 3–இல் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசை கோரினார்.

3. தலைமைப் பொறியாளர் (நெ) தர உறுதி மற்றும் ஆராய்ச்சி அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து தலைமைப் பொறியாளர் (தர உறுதி மற்றும் ஆராய்ச்சி) என அழைக்கப்பட்டு வரும் அலகினை இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் என பெயர் மாற்றம் செய்து ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட பெயர் மாற்றம் செய்வதால் ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி பிற துறைகளில் உள்ள இயக்குநர் பதவிக்கான பணப்பயன் மற்றும் சலுகைகளை கோருதல் கூடாது என தலைமைப் பொறியாளர், தர உறுதி மற்றும் ஆராய்ச்சி அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை (அ.சா.கு.எண். 50079/இ2/12–1, நாள். 31.12.2012), சட்டத்துறை (அ.சா.எண். 16584/13, நாள். 11.09.2013) மற்றும் நிதித் துறையின் (அ.சா.கு.எண். 60466/PWI/2012, நாள். 08.11.2012) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர் (நெ), சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (தர உறுதி மற்றும் ஆராய்ச்சி), சென்னை–25.
அனைத்து தலைமைப் பொறியாளர்கள், நெடுஞ்சாலைத் துறை.
அனைத்து பிரிவுகள், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.

நகல் பெறுநர்
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
சட்டம் / நிதி/ பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.